செ.வெ.எண்-07 நாள்-04.12.2018

# ராபி பருவ பயிர்களுக்கான பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டம் 2018-19

பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டு திட்டம் விவசாயிகளுக்கு எதிர்பாராமல் ஏற்படும் இழப்புகளிலிருந்து பாதுகாப்பாகவும், பண்ணை வருவாயை நிலைப்படுத்தவும் மற்றும் அதிநவீன தொழில்நுட்பங்களை கடைபிடிப்பதை ஊக்குவிக்கவும், 2018-19-ம் ஆண்டில் அரியலூர் மாவட்டத்தில் ராபி பருவத்தில் சாகுபடி செய்யப்படும் கீழ்க்கண்ட வேளாண்மைபயிர்களுக்கு பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் காப்பீடு செய்ய அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

பயிர் - **நெல்-3 / நவரை / கோடை நெல்,** பிரிமியத்தொகை (ஏக்கருக்கு) - **ரூ.443,** காப்பீடு செய்ய கடைசி நாள் - **15.02.2019,** பயிர்கள் - **மக்காச்சோளம்,** பிரிமியத்தொகை (ஏக்கருக்கு) - **ரூ.304, உளுந்து,** பிரிமியத்தொகை (ஏக்கருக்கு) - **ரூ.214, நிலக்கடலை,** பிரிமியத்தொகை (ஏக்கருக்கு) - **ரூ.374, சோளம்,** பிரிமியத்தொகை (ஏக்கருக்கு) - **ரூ.147, எள்,** பிரிமியத்தொகை (ஏக்கருக்கு) - **ரூ.180,** ஆகிய பயிர்களுக்கு காப்பீடு செய்ய கடைசி நாள் - **15.01.2019,** பயிர் - **பருத்தி,** பிரிமியத்தொகை (ஏக்கருக்கு) - **ரூ.1240,** காப்பீடு செய்ய கடைசி நாள் - **28.02.2019,** பயிர் - **கரும்பு,** பிரிமியத்தொகை (ஏக்கருக்கு) - **ரூ.1696,** காப்பீடு செய்ய கடைசி நாள் - **31.10.2019**.

இத்திட்டத்தின்கீழ், கடன் பெறும் விவசாயிகள் வங்கிகளில் / தொடக்கவேளாண் கூட்டுறவுகடன் சங்கங்களில் கட்டாயமாகப் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் பதிவுசெய்யப்படுவர். கடன் பெறா விவசாயிகள், அரியலூர் மாவட்டத்தில் இத்திட்டத்தை செயல்படுத்தும் காப்பீட்டு நிறுவனத்தின் (AICIL) அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் மூலமாகவோ, வங்கிகள் / தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், பொது சேவை மையங்கள் (CSC) மூலமாகவோ தங்களது விருப்பத்தின் பேரில் பதிவு செய்து கொள்ளலாம்.

பயிர் காப்பீட்டுத் தொகையில், விவசாயிகள் 1.5 சதவீதம் மட்டும் காப்பீட்டுக் கட்டணமாக செலுத்தினால் போதுமானது. விவசாயிகள் இத்திட்டத்தின்கீழ் பதிவுசெய்யும் போது முன்மொழிவு விண்ணப்பத்துடன், பதிவு விண்ணப்பம், கிராம நிர்வாக அலுவலர் வழங்கும் அடங்கல், வங்கிக் கணக்கு புத்தகத்தின் (Bank Pass Book) முதல் பக்க நகல், ஆதார் அட்டை (Aadhar card) நகல் ஆகியவற்றை இணைத்து, கட்டணத் தொகையை செலுத்திய பின் அதற்கான இரசீதையும் பொதுச் சேவைமையங்கள் / தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

எனவே, விவசாயிகள் இறுதி நேர நெரிசலை தவிர்க்கவும், விவசாயிகளின் விண்ணப்பங்கள் விடுபடாமல் இருக்கவும், பிரதம மந்திரியின் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் காப்பீட்டுத் தொகை செலுத்தி தங்களது பயிர்களை முன்கூட்டியே பதிவு செய்துகொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**